# இனி தீங்கை காணாதிருப்பாய். செப் 3 : 15

**கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி,**

**உன் சத்துருக்களை அகற்றுவார்.**

**இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்.**

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை வாஞ்சையுடன் வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**இனி தீங்கை காணாதிருப்பாய்.**

ஏன் என்றால், முதலாவது கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி விட்டார்.

இரண்டாவது உன் சத்துருக்களை விலக்கிவிட்டார். மூன்றாவதாக, மிக முக்கியமாக, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அல்லேலுயா!

**யெகோவா ஷம்மா** என்பதற்கு **கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்** என்று அர்த்தமாம்.

**இயேசு சொன்னார் . . .**

ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். **மத். 19 : 20.**

அப்படியானால், இனி தீங்கை காணாதிருக்க வேண்டுமானால், வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமானால், **"இயேசுவின் நாமத்தினால்"** கூடி வரவேண்டியது அவசியமாக இருக்கிறது.

இயேசுவின் நாமத்தையே அடிக்கடி உச்சரிக்க வேண்டும். ஏனெனில் **"அவர் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்"** என உன்னதப்பாட்டு 1 : 3 சொல்கிறது. சங்கீதக்காரன் சொல்கிறார், **கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்** – என்பதாக.

ஆம் சகோதரனே, சகோதரியே, **இயேசுவின் நாமம் / கர்த்தரின் நாமம்** எப்பொழுதும் முன்னால் நிற்கட்டும்.

**ஏனெனில் இயேசு சொன்னார்:**

**யோ 14:14** என் நாமத்தினனாலே எதைக் கேட்டாலும் நான் செய்வேன்.

**மாற்கு 16:17** என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்.

**மாற்கு 9 : 14** என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவதில்லை என்பதாக.

ஆதலால் என் அன்பு சகோதரியே, இந்த மாதம் இயேவின் நாமத்தையே சொல்லிக் கொண்டிருங்கள். உங்கள் விடுதலை **இயேசுவின் நாமத்தினாலே** உள்ளது.

**In the Name of Jesus அல்லது Jesus**

இயேசுவின் நாமத்திலே அல்லது இயேசுவே இந்த இரண்டு வார்த்தைகளை உங்கள் மனதிற்குள் ஒரு நாளைக்கு 100 தடவையாவது சொல்லிப் பாருங்கள்.

டி.வி.ஜி.எம். ஊழியத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணம் **'இயேசு'** என்ற நாமத்தை அடிக்கடி உச்சரிப்பதே. அந்த நாமத்தை அடிக்கடி உச்சரிப்பதே. அந்த நாமத்தையே ஆலயமில்லாத கிராமங்களில் புகுத்துவதற்கு இரவும் பகலும் மிகுந்த உற்சாகத்துடன் உழைக்கிறோம்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, உங்கள் வெற்றியும் இயேசு என்ற நாமத்திலேயே அடங்கியிருக்கிறது. விசுவாசிக்கிறீர்களா ?

**இனி தீங்கை காணாதிருப்பாய்.**

**இயேசுவின் நாமத்தை அறிக்கை பண்ண வெட்கப்படாதீர்கள்.**

லூக் 12 : 8 சொல்கிறது, **மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷ குமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்கள் என்பதாக.**

**இயேசுவை அறிக்கை பண்ணுங்கள்.**

இயேசு சிலுவையிலே ஆக்கினை அடைந்தபடியினால், உன்னுடைய ஆக்கினைகளை அகற்ற வல்லவராக இருக்கிறார். இயேசு சிலுவையிலே சத்துருக்களை வென்றபடியினால், உன்னுடைய சத்துருக்களை வெல்லுவதற்கு வல்லவராக இருக்கிறார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்.

**பக்தர் எமில் பாடுகிறார் :** உயிர் பெறுவீர், ஒன்று கூடுவீர்.
உலர்ந்த எலும்புகளே,
நீங்கள் அறியா ஒருவர்
உங்கள் நடுவில் வந்துவிட்டார்.

**இனி தீங்கை காணாதிருப்போம். ஆமென். ஆமென்.**